செய்திப் பணிப்பாளர் /செய்தி ஆசிரியர் 23.04.2018

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100) : மார்ச் 2018


**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk


2018 மார்ச் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் திரு டி.ஜீ.எஸ்.ஜீ.முணசிங்க அவர்கள், தே.நு.வி.சு.அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2018 பெப்ருவரி மாதத்தில் 3.2% இருந்து 2.8% ஆக குறைவடைந்துள்ளது என தெரிவித்தார். 2018 மார்ச் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்புகள் முறையே 1.2%, 1.6% ஆக இருந்த அதேவேளை, 8.6% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2017 மார்ச் மாதத்தில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளிலினதும் பங்களிப்புகள் முறையே 4.9%, 3.8% ஆக காணப்பட்டன.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2018 பெப்ருவரி மாதத்தில் பதிவாகிய 123.7 இருந்து 2018 மார்ச் மாதத்தில் 122.8 ஆக குறைவடைந்துள்ளது. இது, 2018 பெப்ருவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 மார்ச் மாதத்தில் 0.9 சுட்டெண் புள்ளி அதாவது 0.7 சதவீத புள்ளி குறைவொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.80% ஆல் குறைவடைந்தமையும் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.08% ஆல் அதிகரித்தமையுமாகும்.

உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் குறைவுக்குக் காரணம் மரக்கறி, பெரிய வெங்காயம், அரிசி, சின்ன வெங்காயம், வாழைப்பழம், புதிய மீன், பச்சை மிளகாய், உருளைக்கிழங்கு மற்றும் தேங்காய் ஆகியவற்றின் விலைகள் குறைவடைந்தமையேயாகும். எனினும், சுட்டெண்ணில் அதிகரித்த செலவுப் பெறுமதிகள் நெத்தலிக் கருவாடு, குழந்தைப் பால்மா, முட்டை மற்றும் எலுமிச்சம்பழம் என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 மார்ச் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம், ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’, ‘அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் தியக்கமருந்துகள்’, ‘போக்குவரத்து’, ‘ஆடையும் காலணியும்’ மற்றும் ‘பொழுதுபோக்கும் கலாசாரமும்’ ஆகிய உணவல்லா பிரிவுகளின் சில பொருட்களில் ஏற்பட்ட செலவுப் பெறுமதியின் அதிகரிப்பேயாகும். ‘போக்குவரத்து’ பிரிவின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம், எரிபொருள் வழங்குநர் ஒருவரினால் 2018 மார்ச் 24ஆம் திகதியிலிருந்து எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டமையேயாகும். அத்துடன், ‘பொழுதுபோக்கும் கலாசாரமும்’ பிரிவின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம், 2018 மார்ச் மாதத்திலிருந்து செய்தித்தாள்களின் விலை அதிகரிக்கப்பட்டமையேயாகும். மேலும், முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் ‘தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு’ பிரிவிலுள்ள சில பொருட்களின் செலவுப் பெறுமதியில் ஓரளவு சற்று அதிகரிப்பு பதிவாகின. அதேநேரம், ‘வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்’, ‘சுகாதாரம்’, ‘தொடர்பாடல்’, ‘கல்வி’ மற்றும் ‘உணவகமும் ஹோட்டல்களும்’ ஆகிய பிரிவுகளிலுள்ள பொருட்களின் விலைகள் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டன.




தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | புள்ளிக்கு புள்ளி பணவீக்க% |
|---|---|---|---|---|
| **2017** | மார்ச் | 119.5 | -0.3 | 8.6 |
| | ஏப்ரல் | 121.0 | 1.3 | 8.4 |
| | மே | 121.8 | 0.7 | 7.1 |
| | யூன் | 123.4 | 1.3 | 6.3 |
| | யூலை | 122.4 | -0.8 | 6.3 |
| | ஓகஸ்ட் | 122.3 | -0.1 | 7.9 |
| | செப்ரெம்பர் | 123.3 | 0.8 | 8.6 |
| | ஒக்ரோபர் | 124.8 | 1.2 | 8.8 |
| | நவம்பர் | 126.4 | 1.3 | 8.4 |
| | டிசம்பர் | 126.6 | 0.2 | 7.3 |
| **2018** | ஜனவரி | 125.8 | -0.6 | 5.4 |
| | பெப்ரவரி | 123.7 | -1.7 | 3.2 |
| | மார்ச் | 122.8 | -0.7 | 2.8 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்